வாராந்தப் பாடசாலை சப்பிரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

**வணிகம்**

**“பண வளர்ச்சிக்கு சரியான வழிகளைத் தேடுவோம்” 2**

சேமிப்பு மற்றும் பெற்றுக் கொண்ட பணம் ஒன்றை வேறு வழி ஒன்றில் ஈடுடுத்தும் முறையை நடிபாங்கு ஒன்றின் மூலம் எடுத்துக் காட்டுவதற்கு பொருத்தமான தலைப்பு ஒன்றைத் தெரிவு செய்து அதற்குப் பொருத்தமான பாத்திரஙகளைத் தெரிவு செய்து பொருத்தமான உரையாடல் ஒன்றைத் தயாரிக்கவும்.

**தலைப்பு இலக்கம் 1**

நீர் மற்றும் உமது குடும்பத்தினரின் சேமிப்பு

அன்றாட சேமிப்பை உண்டியலில் சேர்த்தாலும் அதனூடாக இலாபம் ஒன்றை உழைக்க முடியாது.

நாளாந்த சேமிப்பை நிதி நிறுவனங்களில் (வணிக வங்கி / சேமிப்பு வங்கி) சாதாரண அல்லது நிலையான சேமிப்புக் கணக்குகளில் வைப்பிலிடல்.

உ-ம் :-
சாதாரண சேமிப்புக் கணக்குகளில் பணத்தை வைப்பிலிடுவதால் கிடைக்கும் வட்டி வருமானத்தை விடக் குறைவாகும். அதன்படி நிலையான வைப்புக்கு கணக்கு ஒன்றில் பணத்தை வைப்பிலிடுவதால் கூடுதலான வருமானம் ஒன்றை உழைக்க முடியும்.

**தலைப்பு இலக்கம் 2**

நீர் மற்றும் உமது குடும்பத்தினர் சேமிப்புப் பணத்தை மேலதிக வருமாம் உழைப்பதற்காக ஈடுபடுத்தல்.

பல்வேறு முறைகளில் பணத்தை ஈடுபடுத்தல் மற்றும் அதன் மூலம் பெறக் கூடிய வருமானம், இடர், இலாபம் என்பவற்றை ஒப்பிட்டுப் பார்த்தல்.

1) மேலதிக வருமானம் உழைப்பதற்காக பணத்தை ஈடுபடுத்தக் கூடிய பல்வேறு முறைகளை அறிந்து கொள்ளல்.

2) ஓய்வு நேரங்களில் பெற்றோரின் வீட்டுத் தோட்டத்தில் மற்றும் வணிக நடவடிக்கைகளுக்கு உடல் ரீதியாக பங்களிப்புச் செய்தல். அதனால் ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய சம்பளம் மீதியாகும்.

3) தொழிலுக்கு மேலதிகமாக வேறு வருமானம் உழைக்கக் கூடிய செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
உ-ம்:- ஆசிரியர் ஒருவர் மேலதிக வகுப்பு நடத்துவதன் மூலம் மேலதிக வருமானம் உழைக்க முடியும்.

4) சேமித்த பணத்தை இட்டு தமக்கு ஆற்றல்மிக்க துறையில் பொருத்தமான வணிகம் ஒன்றை ஆரம்பித்து நடாத்திச் செல்லல்.
உ-ம்:- சிறுவர் ஆடை தயாரித்தல், பல்வேறு அலங்காரப் பொருட்கள் தயாரித்தல், தாவரக் கன்றுகளைத் தயாரித்து விற்பனை செய்தல், சிறு விளையாட்டுப் பொருட்களைத் தயாரித்தல் போன்ற வணிகள்.